# தொகையிலக்கியக் கால அரசியலில் மூவேந்தரும் பிற தமிழ்ச்சமூகத்தாரும்

# *Mooventhar* and Other Social Sects of Tamilnadu in the Politics During the Period of Anthologies

முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan[1]

## Abstract

This article aims to distinguish the various sects and venthars other than the mooventhar of Tamil society in politics during the period of anthologies. It is needed to bring out the early Tamils' social history, which is entangled with the political history of early Tamilnadu. A historical approach is followed with Puranaanooru and Pathirruppaththu as the primary sources. The other hymns of the eight anthologies, the ten idylls, the statements of the commentators, and the researchers' findings serve as the secondary sources. Besides the three types of leaders viz. venthar, kurunila mannar and representatives among thinaimaanthar, there were naakar and paarppaar who had significant roles in the proceedings of the governments. Athiyamaan and an anonymous venthan who ruled the fort of Akappa are also briefed.

Date of submission: 2022-05-15
Date of acceptance: 2022-06-11
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
Dr.S.Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

**Key Words:** *Athiyamaan, Akappaa, Kurunila mannar,* Leaders among *thinaimaanthar, Naakar, Paarppaa*

### முன்னுரை

பண்டைத் தமிழக அரசியலில் மூவேந்தரோடு இணங்கியும் முரண்பட்டும் பங்கெடுத்த பல்வேறு சமூகத்தினரை விதந்து காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். இது பண்டைத் தமிழக வரலாற்றில் மூவேந்தர் மட்டுமின்றிப் பிற வேந்தர், நாகர், பார்ப்பார், வேளிர், வேட்டுவர், குறும்பர், கிழார், குறவர் ஆகியோர் பங்கைத் தெளிவாக்கும்.

### ஆய்வு முன்னோடிகள்

உ.வே.சாமிநாதையர் தன் புறநானூற்றுப் பதிப்பில்(1894) வேந்தரையும் வேளிரையும் வேறுபிரித்துக் காட்டுகிறார். இரா. இராகவையங்கார் 'கோசர்' என்ற நூலில்(1951) அவரை வேந்தர் என முடிபுரைக்கிறார். 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' என்ற கா.அப்பாத்துரையாரின் நூல்(2014) பண்டைத் தமிழகப் போர்களைத் தொகுத்து விளக்குகிறது. புலவர் கா.கோவிந்தனின் 'சங்ககால அரசர் வரிசை திரையன் முதலிய 29பேர்கள்'(1955) எனும் நூல் அத்தலைவர் பற்றிய விளக்கத் தொகுப்பு ஆகும். ம.பசுவலிங்கம் 'சங்க கால வஞ்சி' என்ற நூலில் சேரநாட்டு அரசியலைப் பேசுகிறார்(1984). Journal of Indian Studies™ Þ,è†´¬ó ÝCKòK¡ 'Features Differentiating Venthar, Velir and Leaders Among Thinaimaanthar' என்ற கட்டுரை(2021) அம்முத்திறத் தலைவர்களின் அடையாளங்களை எடுத்துச் சொல்கிறது;

[1] The author is a retired Principal& HOD in Tamil from Srikaliswari College, Sivakasi. India. kanmanitamilskc@gmail.com

'வளர்தமிழ்' வெளியிட்ட 'பாடல் பெற்ற கிழார்கள்' கிழார்களின் சமூகநிலையைத் தெளிவுறுத்துகிறது(2020).

### ஆய்வு நெறிமுறை

வரலாற்றியல் ஆய்வாக அமையும் இக்கட்டுரையில் புறநானூறும் பதிற்றுப்பத்தும் முதனிலைத் தரவுகளாக; பிற தொகைநூல்கள், உரையாசிரியர் ஆய்வாளர் கருத்துகள் ஆகியன துணைமைத் தரவுகள் ஆகின்றன.

### தமிழகத்து வேந்தர்

சேர சோழ பாண்டியர் எனும் மூன்று மரபினர் மட்டுமின்றிப் பிற வேந்தரும் ஆங்காங்கு ஆள; அவரை மூவேந்தர் அழித்தனர். வேந்தர்க்குள் மணவுறவு, நட்புறவு, பகை, பங்காளிச் சண்டை, தலைமுறை இடைவெளி ஆகிய சிக்கல்கள் இருந்தன. அரசுகட்டில் ஏறா வேந்தரின் கிளையினர் படைத்தலைவர் ஆயினர்.

### வேந்தன் அதியமானும் பிற வேந்தரும்

புறம்.390 அதியமானை 'வேந்தன்' என்கிறது. புறம்.97 அதியனின் படையை வருணிக்கிறது. 'யானை இயல்தேர் அதியமான்' என அடைமொழியுடன் அமரர்ப் பேணி ஆவுதிஅருத்தி; 'இரும்பனம் புடையல்' சூடிப்; புறம்.99101 பாடல்களில் பெருமை பெறுகிறான். இன்று தருமபுரி அருகே அதமன் கோட்டை என வழங்கும் பகுதி அவனது கோட்டை இருந்தமைக்கு ஆதாரமாக அமைய; அதைச் சூழ்ந்து காவல்காடு இருந்தது என்றும்; அவனது தகடூரை அழித்துப் பெருஞ்சேரல் இரும்பொறை ஆட்சிப் பரப்பை விரித்தான் என்றும்; 'இறும்பிற் தகடூர் நூறி' என்ற தொடரால் அறியலாம் (பதிற்றுப்பத்து, 2007. ப.372, பா78). அசோகர் கிர்னார் 2ம்பாறைக் கல்வெட்டில் சேரசோழபாண்டிய சதியபுத்திரர் தாம் அடிப்படுத்தாத வேந்தர் என்றுரைப்பது இங்கு (Upinder Singh, Inscriptions of Ashoka, 2020. p.882-893) குறிப்பிடத்தக்கது. சதியபுத்திரர் அதியபுத்திரர் ஆவர்.

பல்யானைச் செல்கெழு குட்டுவன் உம்பற்காட்டு அகப்பாக் கோட்டையை அழித்தான் என்ற பதிற்.3ம் பத்துப் பதிகச் செய்தி ஒரு வேந்தனை அவன் வெற்றி கொண்டமையை உணர்த்துகிறது. இப்போரில் செம்பியனும் சேர்ந்து ஈடுபட்டதை;

*"குட்டுவன் அகப்பா அழிய நூறிச் செம்பியன்*

*பகல்தீ வேட்ட ஞாட்பினும்"*

என நற்.14 உறுதி செய்கிறது. நாராயணசாமி ஐயர் அகப்பாவைச் சேரனது கழுமலம் என்றும்; அதைச் செம்பியன் அழித்தான் என்றும் கூறுவதை (நற்றிணை, 2007. ப.20) ஏற்க இயலாது. ஏனெனில் இக்கோட்டை செங்குட்டுவனின் முன்னோன் வென்றது எனச் சிலப்பதிகாரமும் கூறுகிறது. உ.வே. சாமிநாதையர் 'அகப்பா என்னும் அரண்' என உரைக்கிறார் (சிலப்பதிகாரம், 1968. ப.564, நடுகற்காதை அ.143144). ந.மு.வேங்கடசாமி நாட்டார் தன் உரையில் 'அது அரண் எனல் பொருந்தாது; மதில்' என்கிறார் (சிலப்பதிகாரம், 1968. ப.602). அதாவது வேந்தனின் கோட்டை அன்று; குறுநில மன்னன் எயிலாக இருக்கலாம் என்பது குறிப்புப் பொருள் ஆகிறது. பாலைக் கௌதமனார் அகப்பாவைப் பாடுங்கால்; 'கணையமரம் துவன்றிய பரந்த வெளிமுற்றத்தை உடைய வாயில், உயர்ந்த நிலை, கனத்துத் தொங்கும் ஐயவித் துலாம், காவற்காடு, ஆழ்ந்த அகழி, வரிசையான கொத்தளங்கள், உயர்ந்த மதிற்சுவர் அனைத்தும் உடைய தலைமை பொருந்தியது' எனப் பதிற்.22ல் விவரிப்பதால் அது ஒரு வேந்தனின் கோட்டை என முடிபு உரைக்க வழி உளது. ஆய்வாளர் சேரர் ஆனைமலைக் காடுகளில் இருந்த அகப்பாவை அழித்ததன் மூலம் கொங்குப் பகுதியில் நுழைந்து தம் ஆட்சிப் பரப்பை விரித்தனர் என்கின்றனர் (ம.பசுவலிங்கம், சங்ககால வஞ்சி, 1984. ப.26). அடையாள மாலை அணிந்து; யானை, குதிரை, தேர் ஆகிய நிலைப்படையுடன்; அகழி, காவற்காடு சூழ்ந்த கோட்டை கட்டி வேந்தர் ஆண்டனர். இவை அரசர்க்குரிய அடையாளங்கள் என உ.வே.சாமிநாத ஐயர் (புறம்., 1894. ப.137140) கூறி உள்ளார். இன்றும் வேந்தர்க்குரிய அடையாளமாகக் கோட்டை விதந்து கூறப்படுகிறது (Kanmani Ganesan,S.,

"Features Differentiating Venthar, Velir and Leaders Among Thinaimaanthar", Journal of Indian Studies, Vol.14 No.1, 2021. pp.55-62).

பாண்டியனின் அரசு இயந்திரம் இயங்கக் கோசர் துணைநின்றனர் (பத்துப்பாட்டு பாகம் ll, 2008. ப.41, மது.அ.772 774). கோசர் வேந்தர் சமூகத்தைச் சேர்ந்தவர் என ஆய்வாளர் நிறுவி உள்ளனர் (இராகவையங்கார்,இரா., கோசர், 1951. ப.17). துளு நாட்டில் இருந்து மதுரை வரை கோசர் பரவி இருந்தனர். மோகூர்ப் பழையனது அரசு காரியங்களிலும் அவர்க்குப் பங்கு இருந்தது. மோரியர் தமிழகத்தில் நுழையப் புதிதாக மலைப்பாதை அமைக்க; அவரது முயற்சியை மோகூரின் வேந்தன் பழையன் மாறன் முறியடித்தான் எனப் புறம்.175; அகம்.69,251,281 ஆகிய பாடல்களால் அறிகிறோம் (அகநானூறு களிற்றியானை நிரை, 2009. ப.183; அகநானூறு மணிமிடை பவளம், 2007. ப.306&3ப.306)

புறம்.345ன் 'வந்தோர் பலரே வம்ப வேந்தர்' என்ற தொடர் தமிழகத்திற்குள் புதிது புதிதாக வேற்று மரபைச் சேர்ந்த வேந்தர் நுழைந்தனர் என்கிறது. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 'புதிய வேந்தர்' என்றே பொருள் உரைக்கிறார் (புறநானூறு பகுதிll, 2007. ப.290). நலிந்த வேந்தருடைய சோர்ந்த ஞாயிலும் சிதைந்த இஞ்சியும் தூர்ந்த கிடங்கும் சூழ்ந்த கோட்டைகள் புறம்.349,355ம் பாடல்களில் காட்சிப் படுகின்றன. இவர்களிடம் தம் மேன்மையை நிலைநாட்ட மூவேந்தர் மகட்கொடை நேர்ந்து அடக்கினர்.

ஆய்வாளர் வேந்தரை மன்னர் எனச் சுட்டக் காண்கிறோம் (கோவிந்தன்,கா., சங்ககால அரசர் வரிசை திரையன் முதலிய 29பேர்கள், 1955. ப.5). ஆனால் தொகைஇலக்கியம் எவ்விடத்திலும் வேந்தரை மன்னர் எனக் குறிக்கவில்லை. தமிழால் ஒன்றுபட்ட வேந்தரும் மன்னரும் வேறானவர்; அவர்க்குரிய பொதுப் பெயர் 'அரசர்' ஆகும்.

### வேந்தர்க்குள் மணஉறவு

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் ஒரு மனைவி சோழன் மகள் மணக்கிள்ளி என பதிற்.5ம் பத்துப் பதிகம் சொல்கிறது.

### வேந்தர்க்குள் நட்புறவு

மூவேந்தர் ஒருங்கு சேர்ந்து இருந்தமையைப் புறம்.367ல் காண்கிறோம். சேரன் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவரும் நண்பராவர். ஒருங்கு இருந்த குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனையும் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும் புறம்.58 பாடுகிறது.

### வேந்தர்க்குள் பங்காளிப்பகை

கிள்ளிவளவனை அவனது பங்காளிகள் ஒன்பது பேர் எதிர்க்கத்; தன் நெருங்கிய உறவினன் ஆகிய கடல் பிறக்கோட்டிய குட்டுவன் துணையுடன் நேரிவாயிலில் போர் செய்து அடக்கினான் என்கிறது பதிற்.5ம் பத்துப் பதிகம். போர்வைக்கோப் பெருநற்கிள்ளி அரசுகட்டில் ஏறுமுன் வேற்று நாடடைந்து வாழ வேண்டி இருந்ததை புறம்.85 உணர்த்துகிறது.

### மூவேந்தர்க்குள் போர்கள்

நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் பொருது ஒருங்கு வீரமரணம் அடைந்ததைப் புறம்.62,63 ஆகிய பாடல்கள் பேசுகின்றன. கரிகாற் பெருவளத்தானும் பெருஞ் சேரலாதனும் பொருத போது சோழனின் படைக்கலனால் புறப்புண் ஏற்பட்டு விடச் சேரன் நாணி வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான் என்கிறது புறம்.65. கணைக்கால் இரும்பொறையும் செங்கணானும் மோதிய போரில் சேரன் சிறைப்பட்டான் எனப் புறம்.74 வழி அறிகிறோம். நெடுஞ்செழியன் தலையாலங் கானத்தில் சேரசோழ வேந்தரையும் ஐந்து மன்னரையும் ஒருங்கு வென்றவன் எனப் புறம்.19,23,25ம் பாடல்கள் போற்றுகின்றன. அவன் யானைக் கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறையைச் சிறை பிடித்ததும்; பின்னர் சேரன் தப்பித்ததும் பற்றிப் புறம்.17ல் காண்கிறோம்.

### வேந்தரும் தலைமுறை இடைவெளியும்

கோப்பெருஞ்சோழனுக்கும் அவனது மக்கட்கும் இடையில் எழுந்த சிக்கல்

தலைமுறை இடைவெளி காரணமானது என்பதைப் புறம்.213 நயம்பட உரைக்கிறது.

### படைத்தளபதி ஆன வேந்தர்

புறம்.167 பாடும் ஏனாதி திருக்கிள்ளி சோழர் வம்சத்தினன் என்பது பெயரால் அறியும் செய்தி. புறம்.394 பாடும் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் சேரமரபில் தோன்றித்; தம் குடியின் செல்வாக்கு குறைந்த போது சோழர் படைத்தலைவன் ஆனவன் எனலாம். புறம்.239 போற்றும் நம்பி நெடுஞ் செழியன் பாண்டியனின் படைத்தளபதி ஆன பாண்டியர் குலத்தோன்றல்.

### வேந்தரும் மன்னரும்

நெல் வேளாண்மைக்காக உழுவித்த வேளிருள் வேந்தருடன் நட்பு பாராட்டியவர், எதிர்த்தவர், வேந்தனின் படைத்தளபதிப் பொறுப்பு ஏற்றவர் எனப் பல திறத்தவர் இருந்தனர். அதிகாரத்துடன் வேந்தர் பெண் கேட்க; வேளிர் மகட்கொடை மறுத்துப் போரிட்டனர். வேந்தர் யானைப் படை கொண்டு வேளிரின் வயலையும் நீர்நிலைகளையும் நாசமாக்கித் தீக்கிரை ஆக்கியதால் அவர் முன் மன்னர் நடுங்கினர். தோற்ற மன்னர் காடுகளில் தஞ்சம் புகுந்தனர். இச்சிக்கலுக்கு இடையே சில மன்னரின் மகள்களை வேந்தர் மணந்தனர்.

### வேந்தர் மன்னர் இணக்கம்

சேர சோழ வேந்தர் தாம் வெற்றி பெற மன்னன் காரியின் துணையை நாடினர் எனப் புறம்.122 கூறுகிறது. புறம்.125 ஆவணமாக்கும் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் செய்த போரில் காரி சோழனுக்கு ஆதரவாக இருந்தான். சோழன் காரியிடம் தஞ்சம் புகுந்து; முள்ளூர் மலையில் பதுங்கி; எதிரிகளை வீழ்த்தி; அரியணை ஏறினான். தன் வெற்றிக்கு உதவிய காரியைச் சோழன் புறம்.174ல் புகழ்கிறான்.

குதிரைமலை மன்னன் பிட்டன் கொற்றன் ஆவான். இவன் கோதை என்ற பெருஞ் சேரல் இரும்பொறையைத் தலைவனாக ஏற்று அவனுக்காகப் போரில் ஈடுபட்டதைப் புறம்.172 பாடுகிறது.

பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்த ஆந்தை மரபைச் சேர்ந்த வேளாளர் தலைவராகிய பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனுடன் கொண்ட நட்பு புறம்.212ல் வெளிப்படுகிறது. பாண்டியனின் மந்திரச் சுற்றத்திலும் அவர்க்கு இடம் இருந்ததால் எப்படி வரி வசூலிக்க வேண்டும் என்பதைப் புறம்.184ல் எடுத்து உரைக்கிறார்

மன்னர் ஏவல் செய்ய நெடுஞ்செழியன் வேள்வி முடித்தான் என்கிறது புறம்.26. சீறூர் மன்னனின் ஊர்நலம் அவன் சார்ந்து இருந்த வேந்தன் வெற்றியில் அடங்கி இருப்பதைப் புறம்.318 காட்டுகிறது. தன் கணவனாகிய சீறூர் மன்னன் வேந்துவிடு தொழில் நிமித்தம் அகன்று இருந்த போதும்; விருந்தாகப் பாணர் குழுவை அழைக்கும் மனையாட்டியின் சொற்கள் வேந்தன் மன்னன் நெருக்கத்தைப் புறம்.319ல் புலனாக்குவன.

### வேந்தர் மன்னர் பகையும் அழல்வினையும்

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி மகளிர்பால் மென்மையும் மன்னர்பால் வன்மையும் கொள்ளும் தன்மையன் என்பது புறம்.10 தரும் செய்தி. அத்தோடு மன்னர் எயிலைப் பாணர்க்கு உரியதாக்கிய வள்ளன்மை உடையவன் எனப் புறம்.203ல் போற்றப் பெறுகிறான். நலங்கிள்ளி பொதிய மலையின் தென்பகுதியாகிய பொருப்பில் மன்னர் எழுவரின் எயில் கதவுகளை அழித்து அவர்களது வளமிக்க நாடுகளை அடிப்படுத்தினான் எனப் புறம்.33 பாடுகிறது. எயில் வேளிர்க்குரிய அடையாளம் ஆகும் (S.Kanmani Ganesan, ibid.). புறம்.352 சோழரது உறந்தை 'வெண்ணெல் வேலித் தித்தன்' எனும் மன்னனை வென்று கரிகாலன் பெற்றது என்கிறது. அவன் வேளிரின் வயலை எரித்துப் பாழாக்கியமை பட்டி.அ.283-284, 240-270ல் உளது. கரிகாலன் பாண்டிய சேரருடன் பதினொரு வேளிரைத் தோற்கடித்தமை 'பதினொரு வேளிரொடு... சாய' என அகம்.246ல் ஆவணமாகி உளது. அவன் இருங்கோவேளை அழித்தமை பட்டி.அ.282ல் இடம் பெறுகிறது. நலங்கிள்ளியிடம் தோற்ற மன்னர் காட்டில் தஞ்சம் அடைந்ததைப் புறம்.28 பகர்கிறது. கரும்பு அல்லது காடு அறியா நாட்டை ஒள்ளெரி ஊட்டினான்

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்கிறது புறம்.16. மூவன் வேந்தனால் அழிந்தமை நற்.18ன் பொருளாகும்.

நெடுஞ்செழியன் வேள் எவ்வியின் 'மிழலையொடு கழனி' பெற்றதை புறம்.24 உரைக்கும். அவனது தலையாலங்கானப் போர் பற்றி முன்னர்க் கண்டோம். 'வேளிர்சாய' வென்று; வயலை எரியூட்டியதைப் பெருமை சேர்ப்பதாக மது.அ.5561,126, 154156, 169176ல் பாடுகிறது.

அதியமான் கோவலூர் மன்னன் காரியுடன் முரண்பட்டு அவனுடன் வந்த ஏழு மன்னரைப் போரில் அழித்தமை புறம்.99ல் புலனாகிறது. புறம்.103 தன் பகைவர் நாட்டை அதியமான் தீக்கிரை ஆக்கியதால் எழுந்த புகை மலைசூழ் மஞ்சு போல அவனது களிற்றைச் சூழ்ந்து காட்சி அளித்தது என்கிறது.

இமயவரம்பன் பகைவேளிர் நாட்டை எரித்தான் எனப் பதிற்.13,15,19ம் பாடல்கள் விரிக்கும். யானைக்கட்சேய் மாந்தரன் சேரல் இரும்பொறை; திருவில் அல்லது கொலைவில் அறியாத; நாஞ்சில் அல்லது படையும் அறியாதவர் மண்ணைக் கவர்ந்தான் எனப் புறம்.20 கூறுகிறது. மழை, ஏர் இரண்டையும் போற்றிய வேளிரை அடக்கினான் எனல் திண்ணம். மோகூர் வேந்தன் பழையனை நன்னன்வேள் தன் தோழர்களான; ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை ஆகிய ஐவரின் துணையோடு அழித்தான் என அகம்.44 விவரிக்கிறது. பின்னர் நன்னனைக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும் இளஞ்சேரல் இரும்பொறையும் சேர்ந்து அழிக்க; நன்னன் வழிவந்த மன்னன் ஆண்ட மோகூரைச் செங்குட்டுவன் காவல் மரமாகிய வேம்பினைத் தடிந்து அழித்தான் எனச் சிலப்பதிகார நீர்ப்படை காதை அ.124126ம்; பதிற்றுப்பத்து 40,44,88- 5ம் பத்துப் பதிகமும் கூறுகின்றன. இளஞ்சேரல் இரும்பொறை மன்னரை வெற்றி பெற்ற பிறகு 'கொள்ளையடித்து விட்டுவிடின்; தோற்றவன் மீண்டும் தலைதூக்கி விடுவான் எனவே; தீக்கிரை ஆக்கினான்' என்கிறது பதிற்.81. இதனால் பல்யானைச் செல்கெழு குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய வேந்தர் முன்னர் பணிந்து நடுங்கி நின்ற வேளிரை முறையே பதிற்.30,75,88 ஆகியன காட்டும்.

ஒரு வேந்தனால் தனித்து அடக்க முடியாத மன்னன் பாரி எனப் புறம்.109116 பாடல்கள் உரைக்கின்றன. வேந்தனை வென்று இரவலர்க்குக் களிறும் தேரும் தரக் கூடிய மன்னனைப் புறம்.313 புகழ்கிறது. சீறூர் மன்னனுக்கும் வேந்தனுக்கும் இடையில் நடந்த போரைப் புறம்.308 வருணிக்கிறது. வேந்தன் யானைப்படையோடு வந்து வேல்களாலும் அம்புகளாலும் தாக்கினும்; நெடுநீர்ப் பொய்கை, நெற்கூடு ஆகியன நிறைந்த வேளாளர் நாட்டை வீரர் காப்பர் எனப் புறம்.287 பாடுகிறது. நீர்வளம் சூழ்ந்து; போர்க்கொடி ஏற்றிய எயிற்புறத்தில்; அரிய திறைப்பொருள் கொடுப்பினும் ஏற்கமறுத்துச்; சினத்துடன் அடையாள மாலை சூடிய வேந்தன் போரைத் தொடர்கிறான் எனப் பாசறை வீரன் அகம்.84ல் நொந்து புலம்புகிறான். யானை கொண்டு தாக்கிய வேந்தரால் எயிற்சுவர் உடைந்துவிட மன்னர் கலங்கியமை நற்.43ல் உவமை ஆகிறது.

## முடிப்பொன்னும் போர்வெற்றியும்

புறம்.40 கிள்ளிவளவன் வேளிர் முடிக்கு அழகூட்டிய பொன்னால் கழல் செய்து அதைத் தன் கால் அழகுற அணிந்து கொண்டான் என்கிறது. பதிற்.40 நன்னன் வேந்தர் ஏழுவரை வென்று அவரது முடிப் பொன்னால் ஆரம் செய்து மார்பில் அணிந்து கொண்ட பெருமை உடையவன் என்கிறது. ஆய்வாளர் இது கற்பனையாகப் பாடப்பட்டது என்று கூறுவதை ஏற்க இயலாது (கா.அப்பாத்துரையார், தென்னாட்டுப் போர்க் களங்கள், 2014. ப.96 112). ஏனெனில் மகனது வெற்றியால் கிடைத்த ஆரம் இமயவரம்பனுக்கு உரித்தானதைப் பதிற்.14 அறிவிக்கத்; தொடர்ந்து நன்னன் வழித்தோன்றிய மோகூர் மன்னனை இமயவரம்பனின் இன்னொரு மகனாகிய கடல்பிறக்கோட்டிய குட்டுவன் வீழ்த்திய பிறகு அவ்ஆரம் அவனுக்கு உரித்தானது எனத் தெளிவான வரலாறு பதிற்.45ல் கிடைக்கிறது.

### வேந்தர்க்கு மகண்மறுத்த மன்னர்

மகண்மறுத்து வேந்தரோடு வேளிர் போர்செய்ய முனைவதால் நிகழவிருக்கும் அழிவை எண்ணிப் புறம்.336 முதல் 355வரை புலவர் அலமந்து அரற்றுகின்றனர். யானையோடு சூழ்ந்த வேந்தர்க்கு; மகளைத் தர மறுத்த மன்னனைக் கபிலர் பெயர் சுட்டாது புறம்.337ல் பாடுகிறார். இவர் பதிற்.7ம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடியவர் என்பது குறிப்பிடத் தக்கது. புறம்.355 சிதைந்த பாடலாக இருப்பினும்; 'கண்ணார் கண்ணிக் கடுமான் கிள்ளி' என; ஆத்தி மாலை சூடிய கிள்ளியின் பெயரைச் சொல்வதால் பெண்கேட்டவன் சோழன் ஆகிறான். புறம்.344ல் ‘காஞ்சிப் பனிமுறி ஆரம் கண்ணி’ அணிந்த குறிப்பு மகட்கொடை நேர்ந்தவன் சோழன் என்கிறது. பெண் கேட்ட வேந்தன்; ‘உறந்தை அன்ன உரைசால் நன்கலம்’ கொடுக்க முனைவதால் அவன் சோழன் எனக் குறிப்பாகச் சொல்கிறது புறம்.352. வேந்தன் பெயர் வெளிப்படையாக இல்லை எனினும்; முசிறி அன்ன நலம்சால் பரிசம் தர முனைகிறான் என்ற புறம்.343ன் செய்தி அவனைச் சேரன் என்று குறிப்பாகச் சொல்கிறது.

தண்பணை மன்னன் வேந்தனுக்கு மகளைத் தரமறுத்ததைப் புறம்.342ல் பாடும் அரிசில்கிழார் பதிற்.ல் பெருஞ் சேரல் இரும்பொறையைப் பாடியவர். புதிதாக வந்த வேந்தர் வேளாளன் மகளை மணமுடிக்க வற்புறுத்தியமை புறம்.345ல் உளது. இப்போராட்டங்கட்கு இடையியே வெளியன் வேள் மகள் நல்லினியை உதியன்சேரலாதன் மணந்தான்; வேளாவிக் கோமான் பதுமனின் இருமகள்கள் இரும்பொறை, உதியன் ஆகிய இருமரபுச் சேரரை மணந்தனர் என்பன முறையே பதிற்.2,4,8ம் பத்துப் பதிகங்களின் செய்திகள் ஆகும்.

### வேந்தனுக்குப் படைநடத்திய மன்னன் மகன்

சோழிய ஏனாதி திருக்கண்ணன் புறம்.174ல் மலையமான் திருமுடிக் காரியின் முள்ளூருடன் தொடர்புறுத்தப் படுகிறான். அவன் மன்னன் காரியின் வழித்தோன்றல் என்பது உறுதி.

### வேந்தரும் திணைமாந்தருள் தலைவரும்

வன்புல இருக்கை அடையாளப்படுத்தும் குறும்பர், வேட்டுவர், குறவர், மறவர் ஆகியோரும்; ஊரன் என்ற பெயரால் அடையாளப்படும் கிழாரும் வேந்தருடன் இணக்கமான உறவு உடையோராகவும்; எதிர்த்து நின்றவராகவும் இருதிறப்பட்டுக் காணப்படுகின்றனர். கிழாரிடம் வேந்தர் அதிகாரத்துடன் பெண்கேட்டனர். வேற்று நாட்டுத் திணைமாந்தரை எதிர்க்கும் சூழலும் புலம்பெயர்ந்த வேந்தர்க்கு ஏற்பட்டது. வேந்தர்க்குச் செவியறிவுறுத்திப்; போர்மேற் சென்று; தூது உரைத்துப்; போற்றுதலுக்கு உரியவராய்த் திணைமாந்தர் இருந்தனர்.

### வேந்தன் புலப்பெயர்வும் திணைமாந்தனும்

போர்வைக்கோப் பெருநற் கிள்ளி தன் நாட்டை நீங்கி வாழ்ந்த சூழலில் ஆமூர் மல்லனோடு மற்போரில் ஈடுபட்டமை புறம்.80ல் பாடப்பட்டுள்ளது.

### வேந்தன் தூதுவராகும் பாணர்

கலைக்குழுத் தலைவியான பாண்குல ஔவையார் அதியனுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றதைப் புறம்.95ல் காண்கிறோம்.

### வேந்தன் மந்திரச் சுற்றமும் வேட்டுவக்குடியும்

தன் பெயராலேயே வேட்டுவக் குடிப் பெண்ணாக அறியப்படும் புல்லாற்றூர் எயிற்றியார் புறம்.213ல் கோப்பெருஞ் சோழனை நெறிப்படுத்தி அவன் மக்களோடு போர் செய்வதைத் தவிர்க்க வைத்த அருஞ் செயல் எயினர் குடியினர்க்கு வேந்தரின் மந்திரச் சுற்றத்தில் இடம் இருந்ததைக் காட்டும்.

### கிழார் வேந்தர் இணக்கம்

பாரம்பரியமாகப் புன்செய் வேளாண்மையில் ஈடுபட்டு உழுத திணைமாந்தரின் ஊர்த் தலைவரே கிழார் எனப்பட்டனர். (ச.கண்மணி கணேசன், "பாடல் பெற்ற கிழார்கள்", Journal of Valartamil, Vol.1 No.2, 24.12.2020. pp.13-24).

'யான்வாழு நாளும் பண்ணன் வாழிய' எனப் புறம்.173ல் சோழன் போற்ற நற்பெயர் பெற்ற பண்ணன் காவிரிக் கரைச் சிறுகுடிக் கிழான் ஆவான். சோழனுக்காகப் போர்மேற் சென்ற பண்ணன் மழை பொய்த்துச் சோழனது நெல்வேளாண்மை குன்றிப்; பஞ்சம் நிலவிய போது; தன் புன்செய்ப் பயனை மக்களுக்கு ஈந்ததைப் புறம்.388; அகம்.177ம் பாடல்கள் காட்டுகின்றன. வேந்தன் படையில் முன்னணியைப் பகைவர் அழித்த போது; தான் ஒருவனே வாள்வலத்தால் எதிர்த்து நின்ற பெருமைக்கு உரிய ஊரனைப் புறம்.330 புகழ்கிறது. புன்செய் சூழ்ந்த சீறூர்த் தலைவன் பெரும்படை உடைய வேந்தனின் உற்ற துணை ஆவதைப் புறம்.324 குறிப்பிடுகிறது. புறம்.314 வன்புலச் சீறூர்க் குடியும் மன்னும் தானாகியவன் வேந்தனுக்கு இணக்கமாக இருந்ததைப் பாடுகிறது. புறம்.320 யானை வேட்டையில் வல்லவன் வாழ்ந்த ஊரின் தலைவன் வேந்துதரு விழுக்கூழைப் பாணர்க்கு வரையாது வழங்கும் பெருந்தகை என உரைப்பதால்; வேந்தனுக்கு நெருக்கமானவன் ஆகிறான்.

### கிழார் வேந்தர் பகை

'நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடைத்த' வேந்தனுக்கு மகட்கொடை மறுத்த பெருஞ் சிக்கல் என்ற ஊரின் கிழான் பற்றிய புறம்.349 அவரிடையே இருந்த பகையைத் தெளிவாக்குகிறது. ஆமானைத் தாக்கும் புலி உலவும் காட்டில் உள்ள ஊரின் தலைவன் வேந்தனது கறையடி யானையைக் கொல்ல எடுத்த வேல் தப்பினால் வாளை எடுத்துச் சாதிப்பான் என்கிறது புறம்.323. வேந்தனின் தூக்கத்தைக் கெடுப்பவன்; வரகை அறுவடை செய்த பின்; எலி வேட்டை ஆடும் சிறுவரின் அம்புக்கு அஞ்சிக்; காட்டுக் குறுமுயல் மட்பாண்டங்கள் உடைய நிலைகெட்டு ஓடும் வன்புலத்தில் வேளாண்மை செய்தவன் என்கிறது புறம்.322. தனிமகனாரின் நற்.153ம் பாடல் வேந்தனிடம் இருந்து தன் ஊரைக் காப்பாற்ற ஊர்காவலன் கடப்பட்டு இருந்ததைக் காட்டும். வேந்தரின் படை நெருங்கியவுடன் மக்கள் ஊரைக் காலி செய்து ஓடினர். ஆனால் ஊர்காவலன் உயிருள்ள வரை போராட வேண்டிய பொறுப்பில் இருந்தான். வேந்தர் திணைமாந்தர் வாழ்வாதாரங்களை எரியூட்டிப் பணிய வைத்தனர்.

### மறவர் வேந்தர் இணக்கமும் பகையும்

வேந்தன் அழைப்பு விடுக்கப் போருக்குச் சென்ற மூதிலாளன் பெருமையைப் புறம்.284 பாடுகிறது. மறவனின் வேல் வேந்தனின் களிற்றைத் தாக்கும் சிறப்புப் பொருந்தியது எனப் புறம்.332 புகழ்கிறது. காட்டக இருக்கையின் தலைவன் வேந்தனை எதிர்த்த போரில் கொன்ற யானையின் ஓடைப் பொன்னை இரவலர்க்குப் பரிசாக அளிக்க வல்லவன் என்னும் பெருமையைக் கூறுகிறது புறம்.326.

வேந்தன் தானையோடு வந்து தாக்கினாலும்; காவல்காடு மட்டுமே சூழ்ந்த காட்டகத்து இருக்கையின் தலைவன் முளவுமா, உடும்பு ஆகியவற்றின் இறைச்சியை ஈய வல்லவன் என்ற புகழ்ச்சியும் புறம்.325ல் இருதிறத்தார்க்கு இடையில் இருந்த பகைமையை உணர்த்துகிறது.

### குறும்பர் வேந்தர் இணக்கமும் பகையும்

வேந்தன் குறும்பரைப் போர்வீரராகக் கொண்டு தண்ணுமை முழக்கி அழைத்ததைப் புறம்.293ல் காண்கிறோம். முல்லைநிலத் தலைவன் வீரமரணம் அடைந்ததால் வேந்தன் பெறவிருந்த வெற்றியைப் புறம்.265 ஐயத்திற்கு இடமாக்குகிறது.

அதியமான் காட்டில் அரண் சூழ்ந்த குறும்புகளை வென்று நறுங்கள் மிகுந்த குடியிருப்புகளை அழித்ததால் அவனது படையின் வேல் காம்புகளில் கறை படிந்து; ஆணிகள் கழன்று கெட்டதைப் புறம்.97 சொல்கிறது. பகை வேந்தன் போரில் வீழக்; காட்டொடு மிடைந்த முன்றிலில் கள்ளுண்டு களித்த தலைவன் எவ்வாறு பாணரை ஓம்புவான் என விரிக்கிறது புறம்.316.

### குறவர் வேந்தர் இணக்கமும் பகையும்

புறம்.157 பாடும் ஏறைக்கோன் எனும் குறிஞ்சித்தலைவன்; 'வேந்துடை அவையத்து ஓங்குபு' நடக்கும் பெருமைக்கு உரியவன். எனவே அவன் வேந்தனின் மந்திரச் சுற்றத்தில்

இருந்தமை ஒருதலை.

குறிஞ்சித் தலைவனாகக் கொல்லி மலையில் வாழ்ந்த வல்வில் ஓரியைக் காரி அழித்துக் கொல்லியைச் சேரனிடம் ஒப்படைத்ததை அகம்.209 பாடுகிறது.

### வேந்தரும் நாகரும்

நாகர் இனத்தவருள் தலைமைத் தன்மை உடைய நாலைகிழவன் நாகன் பாண்டிய வேந்தனின் அமைச்சனாய்த் திறம்படப் பணி ஆற்றியமை பற்றிப் புறம்.179 உரைக்கிறது. வெள்ளைக்குடி நாகனார் கிள்ளி வளவனை புறம்.35ல் செவியறிவுறுத்துவது; ,உழவைத் தம் தலையாய கடமையாகக் கொண்ட குடிமக்களின் நிலக்கடனை நீக்க,; என்ற ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் உரை (புறநானூறு பகுதிI, 2007. ப.98); நாகர் மந்திரச் சுற்றத்தில் இடம்பெற்றதை உணர்த்தும்.

### அரசியல் தூதும் பார்ப்பாரும்

பார்ப்பாரை அரசியல் தூது அனுப்பினர் என்பதைப் புறம்.305 மூலம் அறிகிறோம். மெலிந்து எளிமையாக இருப்பினும்; செயல்திறன் மிகுதியாக இருந்ததால் யாருக்கும் காத்திருக்காது; தயங்காது முற்சென்று; நாவன்மையால் திறம்படத் தூதுரைத்த பாங்கை மதுரை வேளாசான் புகழ்கிறார். அத்தூது போரைத் தவிர்த்தது என்றும் குறிப்பிடுகிறார். பாறைகள் கண்கூச ஒளிவீசும் வெய்யிலில்; மயக்கத்தைக் கொடுக்கும் காட்டு வழியில்; கந்தையை உடுத்து; விலா எலும்புகள் தெரிய; ஒரு பார்ப்பான் வெள்ளிய தூது ஓலையை மடித்து எடுத்துக் கொண்டு செல்வதை அகம்.337 காட்டுகிறது (அகநானூறு நித்திலக்கோவை, 2008. ப.85).

### முடிவுரை

சேரசோழபாண்டியர் எனும் மூன்று மரபினர் மட்டும் இன்றிப் பிற வேந்தரும் ஆங்காங்கு ஆள; அவரை மூவேந்தர் அழித்தனர். அவரிடையே மணவுறவு, நட்புறவு, பகை, பங்காளிச் சண்டை, தலைமுறை முரண்பாடு அனைத்தும் இருந்தன. அரசுகட்டில் ஏறா வேந்தரின் கிளையினர் படைத் தலைவர் ஆயினர்.

நெல்வேளாண்மைக்காக உழுவித்த மன்னருள் வேந்தருடன் நட்பு பாராட்டியவர், எதிர்த்தவர், படைத் தளபதியாகப் பொறுப்பு ஏற்றவர் எனப் பல நிலையினர் இருந்தனர். அதிகாரத்துடன் வேந்தர் மகட்கொடை நேர; வேளிர் மறுத்துப் போரிட்டனர். தம் யானைப் படையால் வேளிரின் நீர்நிலைகளையும் வயலையும் நாசமாக்கித் தீக்கிரை ஆக்கியதால் வேந்தர் முன் வேளிர் நடுங்கி நின்றனர். தோற்ற மன்னர் காடுகளில் தஞ்சம் புகுந்தனர். இச்சிக்கலுக்கு இடையே மன்னர் மகள்களை மணந்த வேந்தரும் இருந்தனர்.

ஊர்த்தலைவராகிய கிழாரிடம் வேந்தர் பெண்கேட்டுத் தம் அதிகாரத்தை நிலைநாட்டினர். வேற்றுநாட்டுத் திணைமாந்தரை எதிர்க்க வேண்டிய சூழலும் புலம்பெயர்ந்த வேந்தர்க்கு ஏற்பட்டது. வன்புல இருக்கையில் வாழ்ந்த திணைமாந்தருள் வேந்தர்க்காகப் போரிட்டுத்; தூது சென்று; செவியறிவுறுத்திய பாணர், வேட்டுவர், குறவர், குறும்பர், மறவர் அடங்குவர். நாகர் படை நடத்தி வேந்தர் மந்திரச் சுற்றத்தில் இடம் பெற்றனர். பார்ப்பார் அரசியல் தூது சென்றனர்.

## References

*Appaaththuraiyaar,kaa.* (2014).

*Thennaattup Porkkalangal.* Chennai*:* poompukaar pathippakam

*Akanaanuuru kalirriyaanai nirai,* (2009). Chennai: kazhaga veliyeedu

*Akanaanooru maninidai pavalam,* (2007). Chennai: kazhaga veliyeedu

*Akanaanooru niththilakkovai,* (2008). Chennai: kazhaga veliyeedu

*Chilappathikaaram*, (1968). Chennai: Thiyaakaraasa vilaasa veliyeedu

*Chilappathikaaram*, (1968). Paakaneri: Tha.Vai.I. Thamizhch changa veliyeedu

Kanmani Ganesan,S., "Features Differentiating Venthar, Velir and Leaders Among Thinaimaanthar", Journal of Indian Studies, Vol.14 No.1, (2021). pp.55-62, ISSN - 1675-171X, https://ejournal.um.edu.my/index.php/JIS/ article/view /31526 /13391).

*Kanmani Ganesan,S*. Padal Petra Kizhar. *Journal of Valartamil*, Vol.1 No.2, (24.12.2020). pp.13-24

*Narrinai,* (2007). Chennai: kazhaga veliyeedu

*Pasuvalingam,M*., *Changakaala Vanji,* (1984). Chennai: Sekar pathippakam

*Paththuppaattu thokuthi* ll, (2008). Chennai: kazhaga veliyeedu

*Pathirruppaththu,* (2007). Chennai: kazhaga veliyeedu

*Puranaanooru*, (1894). Chennai: Law Journal Press

*Puranaanooru pakuthi* l&ll, (2007). Chennai: kazhaga veliyeedu

*Ragavaiyangar,R*., *kosar* (1951). Chidambaram: Annamalai University Publication Series

Upinder Singh, Inscriptions of Ashoka, (2020). Encyclopédie des historiographies : Afriques, Amériques, Asies - Inscriptions of Ashoka - Presses de l'Inalco